## TAMIL NADU POLLUTION CONTROL BOARD

**Minutes of the Public Hearing meeting of M/s. K.Sakthivel Multi Coloured Granite Quarry located at S.F.No.351 of Nallur Village, Kulithalai Taluk, Karur District over an extent of 2.51.5 Hectares held on 24.12.2024 -12.00 Noon at Rajini Thirumana Mahal, Manaparai – Kulithalai Main Road, Thogamalai, Kulithalai Taluk, Karur District.**

**Participants**

1. Thiru.K.Karunakaran,
   Assistant Commissioner (Excise),
   Karur District.

2. Er.V.Jayakumar,
   District Environmental Engineer,
   Tamil Nadu Pollution Control Board,
   Karur.

3. Public– AsperList.

**District Environmental Engineer:**

The District Environmental Engineer welcomed all the public hearing gathered to attend the meeting which is being held on behalf of the District Administration and the Tamil Nadu Pollution Control Board. Now, M/s K. Sakthivel Multi Coloured Granite Quarry had applied to held this public hearing. As per the Environmental Impact Assessment Report of 2006, it is mandatory to seek public opinion on the project. Therefore, this public hearing is being held today. In this regard, already an advertisement was published in the Dinathanthi Tamil daily and The New Indian Express English daily, both dated 20.11.2024. Copies of the Environmental Impact Assessment Report related to this project were made available for public viewing one month in advance at the District Collector's Office, the District Industrial Centre, and the Panchayat Union Office.

He further informed that a wide publicity was also made in this regard about the meeting on 20.12.2024 in Nallur and its surrounding villages through

loudspeakers, pamphlets and posters. A copy of executive summary report in both Tamil and English regarding the project has also been uploaded to the website of the Tamil Nadu Pollution Control Board for public viewing. He then requested the Assistant Commissioner (Excise) to preside over the meeting.

**Assistant Commissioner (Excise):**

The Assistant Commissioner (Excise) welcomed the public who attended the public hearing meeting. He informed that the public hearing regarding M/s.K. Sakthivel Multi Coloured Granite Quarry to be established at SF No. 351, Nallur village is being conducted in accordance with Government guidelines. He also mentioned that information related to this project has already been uploaded on TNPCB websites.He has requested the public to express their views clearly and concisely, without any hesitation. He assured that all the opinions and grievances raised in this public hearing meeting would be submitted impartially to the government. The Assistant Commissioner (Excise) further informed that the project consultant for the quarry would brief the project.

**Environmental Consultant, Eco-tech Labs Private Limited, Chennai:**

He welcomed the Assistant Commissioner (Excise), the District Environmental Engineer, all government officials from various departments, members of the press, environmental activists, and police officers to the public hearing meeting. He then explained the details of the proposed project as follows:

1. Project Summary
2. Project Map
3. Satellite Map
4. Key Features of the Site
5. Satellite Map of the Project Site (300 m, 1.0 km 10 km radius)
6. Village Map
7. Topographic Map - 10 km Radius
8. Proposed Quarry Site
9. Population Density
10. Water Requirement
11. Human Resources
12. Electricity Requirement

13. Process Description
14. Total Geological Reserves
15. Total Mine Reserves
16. Map of Proposed Mine Site
17. Mine Resources and Five Year Production Volume
18. Five Year Production Volume
19. Locations of Baseline Sampling
20. Air Environment
21. Acoustic Environment
22. Aquatic Environment
23. Terrestrial Environment
24. Biological Environment
25. Expected Environmental Impact
26. Green Belt Development
27. Project Cost
28. Corporate Environmental Responsibility (CER) Cost
29. Mine Closure Plan
30. Conclusion and Project Benefits

**District Environmental Engineer:**

He asked the requested the public to register their name along with address and to provide their opinion one by one regarding the project accordingly.

1. **Mr.Nagarajan,Veeranampatty:**

He informed that there is a burial ground with close proximity to proposed to project site. Similarly, residential plots were located in Survey No. 353. He opposed to the project.

2. **Mr.K.Rajasekhar,Tharagampatty :**

He opposed to the Project and instead that permission should not be granted to extract mineral resources from Nallur village. He also added that the unit authority has applied for environmental clearance providing false documents. He also requested that the government authority should take sever enforcement measures to mitigate and control the illegal mining activities.

3. **Mr.Senthilkumar,Perur :**

He welcomed to the project and also added that the issue of environmental clearance should be carried out in compliances with all the available legal mechanism for mining activities.

4. **Mr.R.S.Mukilan, Coordinator, Tamil Nadu Environment Protection Committe, Pugalur, Karur**:

I would like to express my greetings to all those who attended the public hearing meeting for the proposed granite quarry covering an area of 2.51.5 hectares in Kulithalai Taluk, Nallur Village, SF No. 351, jointly organized by the Karur District Administration and the Tamil Nadu Pollution Control Board. He informed that earlier examined the government document available on the internet to verify whether the sitting of the this quarry complies with Section 36 of the Minor Mineral Concession Rules, 1959. It is clearly stated that if there is a cemetery, located at distance of at least 30 meters from the proposed quarry site. He also emphasized that there is a approach road in the South, East and North east of the proposed site. The Pollution Control Board may have published a plan on the internet. There are three cemeteries in SF No. 351. Whether they are currently operational or not is another matter. Mugilan did not say this; it is clearly stated in the government document. The field map shows paths leading to the south, east, and northeast. If there is a carriageway or footpath, the Minor Minerals Act states that the quarry should be located at a distance of at least 35 feet. However, the existence of a cemetery, carriageway, and footpath has been concealed in the project assessment report. This constitutes a violation of the law.

The computer-generated map also shows residential building in SF No. 351 on the northern side. These houses may or may not be demolished. According to Revenue Order No. 26, Section 15, permission cannot be granted to the quarry if houses are found either in demolished or if houses have already been constructed. Additionally, the map indicates the presence of temporary workers' residential quarters within 300 meters of the quarry. Therefore, it is evident that the Sakthivel quarry does not comply with the legal requirements, and permission for its operation cannot be granted as per the law.

There should be no quarry work established within a radius of 300 to 500 meters of any water storage structure or water reservoir. However, this site lies within

500-meter radius, and the quarry operates with numerous violations. Specifically, the Sakthivel quarry has encroached upon the cemetery itself. It is the duty of the people to restore the cemetery, and we earnestly request the RDO of this district to take action to restore it after obtaining necessary permission from the Government. Further more, he added that this quarry is riddled with violations concerning greenery, land use, roadways, and other environmental aspects. Since these operations contravene the Minor Minerals Act, permission for the quarry should not be given and cannot be granted under the law at any cause. It is deeply concerning that some high-ranking officials and intellectuals, who are expected to protect the interests of the people, are instead acting against them in exchange for money. Such acts of corruption are punishable under the law, and these individuals may face imprisonment. Through this video, we appeal directly to the Chairman and Executive Chairman of the State Environmental Assessment Committee to ensure that permission for this quarry should not be granted. We also call on the Government, as per the DMK's election agenda, to take over and manage all the private quarry establishments has there are lot of violations in the proposed Sakthivel quarry. Since there are violations in the Sakthivel quarry, he also added that clearance cannot be granted at any cause to this Sakthivel quarry and he concluded his speech by saying, "Thank you for the opportunity."

5. **<u>Mr.Marutharaj, President, Nallur Panchayat :</u>**

I am the President of Nallur Panchayat. The land for the Sakthivel Quarry was sanctioned in 2017. Our village is one of the most economically backward villages in the Kulithalai Union, with a population of 2,200 voters. We look at the government infrastructure available in our village, there is only a single school and a cooperative society which operates on a part-time basis.

I have studied MBA, and my wife has studied MA. As far as we know, no industrial activities has come to our village so far, nor is there any likelihood of one coming in the near future. When approached by the quarry operators, they treated us like family, and we gave them permission to start their operations after signing an agreement with us. The quarry was operated for one year later it was closed. He also added that about over 100 families improved significantly. They supported the villagers by providing job opportunity there by improving their economic conditions. Additionally, they contributed to the development of the community by providing water pump motor facilities to schools, donating for the maintenance of temples, and

helping with the foundation work of the Village Administration Office.

There is no designated cemetery in Nallur Village. When a death occurs, families bury their loved ones on their own patta land. There is no cemetery shed or burial ground approved by the government or the authorities. The entire northern part of the quarry consists of only 9 acres of land belonging to our community. I am not fully aware of the background of this matter. Similarly, the quarry owner is neither a VIP nor a wealthy businessman. He is a business owner who operates by taking loans on interest. Despite this, he has been cooperative and has adhered to our requests. I am not here to present evidence or argue; I am simply speaking from my heart. I earnestly appeal to the officials: this quarry is the only industry in our village. Nallur, which spans 140 acres, has only a big bridge and trees. I request you to conduct a field survey and see the situation for yourselves.

There is not a single poultry farm or goat farm in our village to support the livelihood of the people. If this company operates, everyone in our village will have opportunities to graze goats and cows, do small jobs, and improve their livelihoods. Let the law determine whether the quarry is legal or not. I am speaking purely from a humanitarian perspective. We are not troubled by the presence of this quarry. Some claim there is a carriage way near the quarry, but I have built my house on what they call a carriage way. There is no carriageway around the quarry in Nallur Panchayat. There might be carriageways in the East Kallai and West Gudalur areas, but not here. There is no opposition within our village. Complainants from outside village cannot come and simply entertained here. He concluded his speech by welcome in the project.

6. **Mr.P.Rathinam, Nallur:**

I am a member of the Panchayat Council representing the 5th Ward. Our village is predominantly below the poverty line. This quarry has the potential to benefit the educated youth by creating more employment opportunities. As long as the quarry operates in compliance with government regulations, we have no objection to its functioning and he welcomed the project.

7. **Mr. Mani, Ponnampatty:**

He welcomed the project and stated that he has no objection to the establishment of this quarry, provided if it complies with government regulations.

8. **Mr. Ponnusamy, Nallur :**

If this quarry is established, the village will develop. Regardless of which government is in power, our village remains backward. Therefore, he has no objection to the establishment of this quarry and he welcomed the project.

9. **Mr.Nagaraj, Bommanayakkanpatty :**

Greetings to everyone. There is no crisis in Nallur village. We have the opportunity to plant many coconut trees around the area. The place should be greened. Already, 100 saplings have been planted, but many more saplings need to be planted. We must work towards making it greener.

The District Environmental Engineer stated that the public opinions expressed during this public hearing meeting would be recorded both in video and in writing, and forwarded to the State Environmental Impact Assessment Committee.

**District Environmental Engineer:**

Finally, he expressed his gratitude to all the government officials, police, journalists, and the public on behalf of the District Administration and the Tamil Nadu Pollution Control Board, including the Assistant Commissioner (Excise) who chaired the public hearing. The session concluded with the playing of the national anthem, marking the end of the public hearing.

**District Environmental Engineer ,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Karur District.**

**Assistant Commissioner (Excise),**
**Karur District.**

## தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

**கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், தோகைமலை, மணப்பாறை–குளித்தலை மெயின்ரோடு, ரஜினி திருமண மஹாலில் 24.12.2024 அன்று நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்ற கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், நல்லூர் கிராமம், புல எண். 351–ல் 2.51.5 ஹெக்டர் பரப்பளவில் அமையவுள்ள தி/ள்.K.சக்திவேல் பல வண்ண கிரானைட் குவாரி திட்டப் பணிக்கான பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

**பங்கு பெற்றோர்:**

1. திரு. கி. கருணாகரன்,
   உதவி ஆணையர்(கலால்),
   கரூர் மாவட்டம்.

2. பொறியாளர். வெ. ஜெயக்குமார்,
   மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
   தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
   கரூர் மாவட்டம்.

3. பொதுமக்கள்– (இணைப்பில் உள்ளபடி)

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் தனது வரவேற்புரையில் மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாக, பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்திற்கு கலந்து கொள்ள வருகை தந்துள்ள அனைவரையும் வரவேற்பதாக கூறினார். மேலும், தி/ள்.K.சக்திவேல் பல வண்ண கிரானைட் குவாரி தொடர்பான பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தினை நடத்தி தருவதற்காக விண்ணப்பம் செய்திருந்தனர். சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை, 2006 உத்தரவின்படி, மேற்படி திட்டத்திற்கு பொதுமக்களின் கருத்துக்களைக் கேட்டு அறிவது கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது. எனவே இன்றைய தேதியில் கருத்துக் கேட்புக் கூட்டம் நடைபெறுகிறது. இது தொடர்பாக ஏற்கனவே 20.11.2024 நாளிட்ட தினந்தந்தி தமிழ் நாளிதழ் மற்றும் 20.11.2024 நாளிட்ட தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது எனவும், இந்த திட்டம் தொடர்பான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையின் நகல்கள் ஒரு மாதத்திற்கு முன்பாகவே மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், மாவட்ட தொழில் மையம் மற்றும் ஊராட்சி ஒன்றியம் அலுவலகம்

உள்ளிட்ட இடங்களில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்ததாகவும் கூறினார். மேலும், கூட்டத்தை பற்றிய பொது அறிவிப்பு ஒலி பெருக்கி, துண்டு பிரசுரம், சுவரொட்டி மூலமாக 20.12.2024 அன்று நல்லூர் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்தார். மேலும், மேற்படி திட்டம் தொடர்பான தமிழ் மற்றும் ஆங்கில சுருக்கு அறிக்கை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இணையதளத்திலும் பொதுமக்கள் பார்வைக்கு பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். பின்னர் உதவி ஆணையர் (கலால்) அவர்களை கூட்டத்திற்கு தலைமையேற்று நடத்தி தருமாறு கேட்டுக்கொண்டார்.

**<u>உதவி ஆணையர் (கலால்):</u>**

தலைமை உரையாற்றிய உதவி ஆணையர் (கலால்) அவர்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு வந்த அனைவரையும் வரவேற்றார். தி/ள். K.சக்திவேல் பல வண்ண கிரானைட் குவாரி என்ற கிரானைட் குவாரி தொடர்பாக நல்லூர் கிராமத்தில் புல. எண். 351–ல் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் அரசு வழிகாட்டுதலின்படி நடத்தப்படுவதாக தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பான தகவல்கள் ஏற்கனவே இணையதளங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தார். பின்னர் பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை எவ்வித தயக்கமின்றி தெளிவாகவும், சுருக்கமாகவும் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொண்டார். இந்த பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தில் கலந்து கொள்ளும் பொதுமக்களின் அனைத்து கருத்துக்களும் எவ்வித பாகுபாடுமின்றி அரசுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் தெரிவித்தார். மேலும் இத்திட்டம் தொடர்பான தகவல்களை விளக்கக் காட்சியாக நிறுவனத்தின் திட்ட ஆலோசகர் தற்போது உங்களுக்கு விளக்கமாக தெரிவிக்க உள்ளனர் என்று தெரிவித்தார்.

**<u>ஆலோசகர், ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை:</u>**

இந்த பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் உதவி ஆணையர் (கலால்) மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் உள்ளிட்ட அனைத்துத் துறை அரசு அலுவலர்களையும் பத்திரிக்கை நண்பர்களையும், சுற்றுச்சூழல் ஆர்வலர்களையும் மற்றும் காவல்துறை அதிகாரிகளையும் வரவேற்பதாக தெரிவித்தார். இவர் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம் குறித்த விவரங்களை கீழ்க்கண்டவாறு விவரித்தார்.

1. திட்ட சுருக்கம்
2. திட்ட வரைபடம்
3. செயற்கைக்கோள் வரைபடம்
4. தளத்தின் முக்கிய அம்சங்கள்
5. திட்டத்தளத்தின் செயற்கைக்கோள் வரைபடம் (300 மீ, 1.0 கி.மீ & 10 கி.மீ. ஆரம்)
6. கிராம வரைபடம்
7. நிலப்பரப்பு வரைபடம் – 10 கி.மீ. ஆரம்

8. முன்மொழியப்பட்ட குவாரி தளம்
9. மக்கள் தொகை அடர்த்தி
10. நீர் தேவை
11. மனித வளம்
12. மின்சார தேவை
13. செயல்முறை விளக்கம்
14. மொத்த புவியியல் இருப்பு வளங்கள்
15. மொத்த சுரங்க இருப்பு வளங்கள்
16. முன்மொழியப்பட்ட சுரங்க தளத்தின் வரைபடம்
17. சுரங்க வளங்கள் மற்றும் ஐந்து வருடம் உற்பத்தியின் அளவு
18. ஐந்து வருடம் வாரியாக உற்பத்தியின் அளவு
19. அடிப்படை ஆய்வு மாதிரிகள் எடுக்கப்பட்ட இடங்கள்
20. காற்றுச்சூழல்
21. ஒலிச்சூழல்
22. நீர்ச்சூழல்
23. நில சுற்றுச்சூழல்
24. உயிரியல் சுற்றுச்சூழல்
25. எதிர்பார்க்கப்படும் சுற்றுச்சூழலின் தாக்கம்
26. பசுமைவளையம் மேம்பாடு
27. திட்டத்தொகை
28. பெருநிறுவன சுற்றுச்சூழலூ பொறுப்பு (CER) செலவு
29. சுரங்க மூடல் திட்டம்
30. முடிவுரை மற்றும் திட்டத்தின் நன்மைகள்

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:**

பொதுமக்கள் தங்களது பெயர் மற்றும் முகவரியினை பதிவு செய்துவிட்டு அதன்படி இத்திட்டம் குறித்த கருத்துக்களை தெரிவிக்குமாறு கூறினார்.

1. **திரு.நாகராஜன், வீரணம்பட்டி :**

இந்த குவாரி அமையக்கூடிய இடத்திற்கு பக்கத்தில் பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய மயானம் இருக்கிறது. அதேபோன்று சட்ட விதிகளுக்கு புறம்பாக குடியிருப்பு பகுதிகள் சர்வே எண்.353–ல் உள்ளது. சட்டத்திற்கு புறம்பாக உள்ளதால் இந்தக் குவாரிக்கு அனுமதி வழங்கக்கூடாது என்று கூறினார்.

2. **திரு. K. ராஜசேகர், தரகம்பட்டி :**

நல்லூர் கிராமத்தில் செயல்படக்கூடிய கனிம வளங்களை வெட்டி எடுக்கக்கூடியதற்கு அனுமதி வழங்கக்கூடாது. அரசுக்கு புறம்பாக தவறான சான்றுகளை கொடுத்து அனுமதி வாங்கி உள்ளார்கள். எனவே உரிய நடவடிக்கை எடுத்து கனிமவளத் திருட்டை செயல்படுத்த அனுமதி வழங்கக்கூடாது என கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

3. **திரு. செந்தில்குமார், பேரூர்**

குவாரி இந்த ஊருக்கு வருவதை வரவேற்கிறோம். சட்டதிட்டத்திற்கு உட்பட்டு செயல்பட அனுமதி அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் என்று கூறினார்.

4. **திரு. இரா.சா. முகிலன், தமிழ்நாடு சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம், ஒருங்கிணைப்பாளர், கரூர்.**

கரூர் மாவட்ட நிர்வாகமும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியமும் இணைந்து நடத்துகின்ற குளித்தலை வட்டம், நல்லூர் கிராமம், புல எண்.351–ல் 2.51.5 ஹெக்டர் பரப்பளவிற்கான கிரானைட் குவாரிக்கான பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டத்திற்கு வந்திருக்கக்கூடிய அனைவருக்கும் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த கல்குவாரி அரசு சொல்லக்கூடிய சிறுகனிம சலுகை விதிகள் 1959 விதி 36–ன் அடிப்படையில் அமைந்திருக்கிறதா என்று அரசினுடைய ஆவணங்களிலும் இணையத்தின் வாயிலாகவும் ஆய்வு செய்தததில் மயானம் இருந்தால் 30 மீட்டர் இடைவெளிவிட்டு தான் கல்குவாரி இயங்கவேண்டும். மாசு கட்டுப்பாடு வாரியம் இணையத்தில் வெளியிட்டிருக்கக்கூடிய வரைபடம். 351–ல் மூன்று மயானங்கள் உள்ளது. அது இப்பொழுது செயல்பாட்டில் உள்ளதா இல்லையா என்பது வேறு இதை முகிலன் கூறவில்லை. அரசு சொல்லக்கூடிய ஆவணம் கூறுகிறது. புல வரைபடத்தில் தெற்கு பகுதியிலும், கிழக்கு பகுதியிலும், வடகிழக்கு பகுதியிலும் பாதை செல்கிறது. வண்டிப்பாதை, நடைபாதை இருந்தால் 35 அடி இடைவெளிவிட்டுத்தான் குவாரி அமையவேண்டும் என்று சிறுகனிம விதி கூறுகிறது. ஆனால் இவர்கள் மயானம், வண்டிப்பாதை, நடைபாதை இருப்பதை மறைத்து இங்கே திட்ட மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பித்து இருக்கிறார்கள். இது சட்டப்படி குற்றம்.

இதன் வடக்குப் பக்கம் புல எண்.351–ல் வீடுகள் உள்ளதை கணினி வரைபடம் சொல்கிறது. வீடு இடிந்து இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். அப்படி வீடு இருந்தாலோ வீடு கட்டப்பட்டு இருந்தாலோ குவாரிக்கு அனுமதி கொடுக்கக் கூடாது என்று வருவாய் நிலை ஆணை எண்.26, பிரிவு15–ல் கூறுகிறது. அதேபோல், குவாரியை சுற்றி 300 மீட்டருக்குள் கணினி வரைபடத்தில் தற்காலிக தொழிலாளர் குடியிருப்பு வீடுகள் காட்டப்பட்டுள்ளது. எனவே சக்திவேல் குவாரிக்கு சட்டப்படி அனுமதி கொடுக்க முடியாது என்பதுதான் உண்மை.

ஏனென்றால் வீடு, மயானம், வண்டிப்பாதை, ஓடை ஆகியவை 300 மீட்டருக்குள் இருப்பதால் சட்டப்படி இந்த குவாரிக்கு அனுமதி கொடுக்க முடியாது. அதேபோல், 300 மீட்டருக்குள் தொழிலாளர்களுடைய தற்காலிக குடியிருப்பு கணினி வரைபடத்தில் இருப்பதால் அனுமதி வழங்க முடியாது. எனவே இப்படி பல்வேறு விதிமுறைகளை மீறி 300 மீட்டர், 500 மீட்டர் சுற்றளவில் தண்ணீர் எடுக்கின்ற இடம் நீர் தேக்கத்தொட்டியும் இருக்கக் கூடாது. ஆனால் இந்த புலத்தை சுற்றி 500 மீட்டர் சுற்றளவில் அவை எல்லாம் இருக்கிறது. எண்ணற்ற விதிமீறல்களோடு இந்த சக்திவேல் கல்குவாரி, மயானத்தையே ஆக்கிரமித்துள்ளார்கள். எனவே மயானத்தை மீட்டெடுக்கவேண்டியது மக்களுடைய கடமை. இந்த மாவட்டத்தினுடைய துணை ஆட்சியர் அவர்கள் அரசின் அனுமதியோடு மயானத்தை மீட்டு எடுக்கவேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

அது மட்டுமில்லாமல், பசுமை, நிலம், சாலை இப்படி எண்ணற்ற வகையில் பல்வேறு விதிமீறல்களோடு தான் இந்த குவாரி இயங்கிக் கொண்டிருக்கிறது. சிறுகனிம விதிப்படி மீறி இருப்பதால் சட்டப்படி அனுமதி கொடுக்கக் கூடாது, கொடுக்க முடியாது. உயர்அதிகாரிகள், படித்த மேதாவிகள் பணத்தை வாங்கிக் கொண்டு மக்களுக்கு விரோதமாக செயல்படுகிறார்கள். அவர்கள் சிறைக்கு செல்ல வேண்டிய நிலைமை வரும் என்பதை இந்த வீடியோ வழியாக ஆய்வுக்கு உட்படுத்தக்கூடிய மாநில சுற்றுச்சூழல் மதிப்பீட்டு குழுமம் தலைவர், செயல் தலைவர் அங்கே இருக்கக்கூடிய அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம் என்றார். இந்த குவாரிக்கு அனுமதி கொடுக்க வேண்டாம் என்ற கோரிக்கையையும் முன் வைக்கின்றோம். அதேபோல் தேர்தல் அறிக்கையில் திமுக அறிவித்ததுபோல் அரசே ஏற்று நடத்தவேண்டும் என்று அரசுக்கு கோரிக்கையை முன் வைக்கின்றோம். சக்திவேல் குவாரி விதிமீறல் இருப்பதால் அனுமதி கொடுக்க முடியாது, கொடுக்க கூடாது வாய்ப்புக்கு நன்றி என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

5. **<u>திரு.மருதராஜ், நல்லூர் ஊராட்சி மன்றத் தலைவர்:</u>**

நான் நல்லூர் ஊராட்சி மன்றத் தலைவராக உள்ளேன். 2017–ல் நிலம் அனுமதிக்கப்பட்டதுதான் சக்திவேல் குவாரி. எங்கள் கிராமம், குளித்தலை ஒன்றியத்திலேயே பொருளாதார அடிப்படையில் மிகவும் பின்தங்கிய கிராமம். 2200 ஓட்டு உள்ளதால் இது கிராமம். இந்த கிராமத்தில் அரசு கட்டிடம் என்று பார்த்தால் பள்ளி மட்டுமே உள்ளது. ஒரு கூட்டுறவு சொசைட்டி அதுவும் பகுதிநேரம் தான். நான் எம்.பி.ஏ படித்துள்ளேன். என் மனைவி எம்.ஏ படித்து உள்ளார்கள். எங்களுக்கு தெரிந்து இதுவரை இங்கு எந்த தொழில் நிறுவனமும் வரவில்லை, வரபோவதும் இல்லை. அண்ணனாக பார்த்துகேட்டுக் கொண்டார். நாங்கள் அனுமதி வழங்கினோம். எங்களுடைய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பின்பு தொடங்கினார்கள். பின்பு ஒரு வருடத்தில் குவாரியை மூடினார்கள்.

அந்த குறுகிய காலத்திலேயே 100 குடும்பங்களின் வாழ்வாதாரம் உயர்ந்தது. சிறு சிறு வேலைகளும் கொடுத்து அனைத்து கிராம மக்களின் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்தி வருகிறார்கள். பள்ளிகளுக்கு மோட்டார் வசதியும், கோவில்களின் பராமரிப்பு பணிக்கு நன்கொடை செய்துள்ளார்கள். கிராம நிர்வாக அலுவலகத்தில் தளம் அமைக்கும் பணிக்கு உதவி செய்துள்ளார்கள். நல்லூர் கிராமத்தில் எந்தவொரு மயானமும் இல்லை. இறப்பு நடந்தால் அவரவர் பட்டா நிலத்தின்தான் அடக்கம் செய்வார்கள். அரசாங்க இடத்தில் அனுமதி பெற்றோ அதிகாரிகள் அனுமதி பெற்ற மயான கொட்டகை எதுவும் அங்கே இல்லை. குவாரியின் வடக்கு பகுதி முழுவதும் எங்கள் சமூகத்திற்கு சொந்தமான 9 ஏக்கர் இடம்தான் உள்ளது. இதன் பின்னணி என்வென்று தெரியவில்லை. அதேபோல் கல்குவாரி உரிமையாளர் பெரிய VIP- யோ இல்லை பெரிய தொழிலதிபரோ கிடையாது. கல்குவாரி உரிமையாளர் வட்டிக்கு வாங்கி தொழில் செய்பவராக இருந்தாலும் நாங்கள் கேட்பதை செய்து கொண்டு உள்ளார். நான் ஆதாரம் எடுத்துக் கொண்டு வந்து பேச விரும்பவில்லை. மனதிற்குள் உள்ளதை கூறுகிறேன் என்றார். தயவுசெய்து அதிகாரிகள் அவர்களே இந்த ஊரில் உள்ள ஒரே நிறுவனம் இது ஒன்று தான். 140 ஏக்கர் உள்ள நல்லூரில் பெரிய பாலமும் மரமும் தான் உள்ளது நீங்கள் களஆய்வு செய்து பாருங்கள்.

மனிதன் வாழ்வதற்கு ஒரு கோழி பண்ணையோ, ஆட்டு பண்ணையோ இல்லை. இந்த நிறுவனத்தையாவது இயங்கவிட்டால் எங்கள் ஊரில் உள்ள மக்கள் அனைவரும் ஆடு, மாடு மேய்த்துக் கொண்டு அங்கே சிறு சிறு உதவிகள் செய்து வேலைவாய்ப்பினை உருவாக்கி கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி கொள்வார்கள். இதனால் சட்டப்படி இருக்கிறதோ இல்லையோ அவற்றை சட்டம் பார்த்துக் கொள்ளட்டும். மனிதாபிமானம் அடிப்படையில் கூறுகிறேன் இந்த நிறுவனத்தால் எங்களுக்கு எந்தவொரு இடையூறும் இல்லை. வண்டிப்பாதை உள்ளது என்று கூறுகிறார்கள். நான் அந்த வண்டிப்பாதையில் தான வீடே கட்டியுள்ளேன். நிறுவனத்தை சுற்றிலும் நல்லூர் பஞ்சாயத்தில் எந்தவொரு வண்டிப்பாதையும் இல்லை. கிழக்கு கள்ளை, மேற்கு கூடலூர் பகுதிகளில் வண்டிப்பாதை இருக்கலாம். இல்லாமலும் இருக்கலாம் என்றார். எங்கள் ஊரில் எந்த எதிர்ப்பும் இல்லை. எங்கிருந்தோ வந்து இங்கே குறை கூறுவது சாத்தியப்படாது என்று கூறி தனது உரையை முடித்துக் கொண்டார்.

6. **<u>திரு.பி.ரத்தினம், நல்லூர் :</u>**

நான் ஊராட்சி மன்ற 5–வார்டு உறுப்பினராக உள்ளேன். எங்கள் ஊர் வறுமைகோட்டிற்கு கீழ் உள்ளது. இங்கே இரண்டாவது படித்த இளைஞர்களுக்கு இந்த நிறுவனம் உதவிகரமாக இருக்கிறது. வேலைவாய்ப்பு அதிகம் இருக்கும். அரசு விதிகளுக்கு உட்பட்டு இருந்தால் எங்களுக்கு எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்.

7. <u>திரு. மணி, பொன்னம்பட்டி :</u>

இந்த குவாரி அமைவதில் எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்.

8. <u>திரு.பொன்னுசாமி, நல்லூர்</u>

இந்த கல்குவாரி அமைந்தால் ஊர் வளர்ச்சி அடையும். எந்த ஆட்சி வந்தும் எங்கள் ஊர் பின்தங்கி உள்ளது. எனவே இந்த குவாரி அமைவதில் எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என்று கூறினார்.

9. <u>திரு. நாகராஜ், பொம்மநாயக்கன்பட்டி :</u>

அனைவருக்கும் வணக்கம். நல்லூர் கிராமத்தை பொருத்தவரையில் எந்த நெருக்கடியும் இல்லை. இடத்தை சுற்றி நிறைய தென்னை மரக்கன்றுகளை நட்டு அதிக மரக்கன்றுகளை நடுகின்ற வேலைகளை செய்யலாம். இடத்தை பசுமையாக மாற்றவேண்டும். 100 மரக்கன்றுகளை நட்டுள்ளார்கள். இன்னும் ஏராளமான மரக்கன்றுகளை நடவேண்டும். பசுமையாக மாற்ற வேண்டும் என்று கூறினார்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் இந்தக் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் நடைபெற்ற பொதுமக்களின் கருத்துக்களை வீடியோவாகவும், எழுத்துரு மூலமாகவும் பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்று கூறினார்.

<u>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:</u>

இறுதியாக தனது நன்றி உரையில் இந்த பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு தலைமையேற்று நடத்திய உதவி ஆணையர் (கலால்) உள்ளிட்ட அனைத்து அரசு அலுவலர்களுக்கும், காவல்துறையினருக்கும், பத்திரிக்கையாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாகவும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாகவும் தனது நன்றியை தெரிவித்தார். இறுதியாக நாட்டுப்பண் ஒலித்தது. அத்துடன் பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் நிறைவு பெற்றது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
கரூர் மாவட்டம்.

உதவி ஆணையர் (கலால்) ,
கரூர் மாவட்டம்.